# யுத்த நிறுத்தத்தை தொடர முடியாதுள்ளோம்; தமிழ்மக்கள் அனைவரும் இணைந்து போராடுவோம்

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆனி: 5 துல் ஹஜ்தா: பிறை: 25 இதழ்: 127
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-06-1990

## விடுதலைப்புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)
''நாம் விரும்பாத யுத்தம் எம் மீது திணிக்கப்படுகிறது. இதனால் யுத்த நிறுத்தத்தைத் தொடரமுடியாத நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். எனவே ஸ்ரீலங்காப் படையின ருக்கு எதிராகத் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடியே தீரவேண்டும்'' என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயற்குழு நேற்று வெளி

(6-ம் பககம் பார்க்க)

## விடுதலைப் புலிகள்— வவுனியா பொறுப்பாளர் தயாபரன் வீரமணம்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகள் வவுனியா மாவட்ட இராணுவ பொறுப்பாளர் தயாபரன் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்.

நேற்றுக் காலை வவுனியா நகரிலுள்ள வைரவர் புளியங் குளத்தில் இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட கடும் மோதலில் இவர் வீரமரணம் அடைந்தார். (153)

# வடக்கு கிழக்கில் யுத்தநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது!

## போராளிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)
**விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளதாகப் பெருந் தோட்டத் தொழிற்துறை அமைச்சரும், பாது காப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலைமையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தனித்தனி இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

நிலைமைகளை அனுசரித்துக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாகாணத்தில் போர் அவசியம் எனக் கருதப்படுவதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினர்

## ஹெலி உணவு

[யாழ்ப்பாணம்]
ஹெலிகொப்டரிலிருந்து நேற்று முன்தினம் இரவு யாழ். கோட்டை இராணுவத்தினருக்குப் போடப்பட்ட உணவுப் பொருள்கள் யாழ். சுப்பிரமணியம் பூங்கா உட்பட பலபகுதிகளில் தேடுவாரற்ற நிலையில் காணப் பட்டது.

பிஸ்கட் பைக்கெட், இறைச்சிரின், பழரின் உட்பட பல உணவுப் பொருட்கள் காணப்பட்டன.

## பட்டிருப்பு, ஒட்டமாவடியில் பாலங்கள் தகர்க்கப்பட்டன!

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சுமார் நூறுஅடி நீளமுடைய பட்டிருப்புப் பாலமும், வாழைச் சேனையிலுள்ள ஒட்டமாவடிப் பாலமும் நேற்று முன்தினம் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன.

இப்பகுதி நோக்கி சுமார் 2,500 இராணுவத்தினர் முன்னேற முயன்றதையடுத்து இப் பாலம் தகர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதையடுத்து இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கடும் சண்டை நடைபெறுகிறது(சி)

## பிந்திய செய்தி

**நள்ளிரவு 12-30 மணி முதல் கோட்டை இராணுவ முகாமுலிருந்து 'ஷெல்' தாக்குதல். காலை 4-00 மணி முதல் ஹெலி தாக்குதல்.**

## படைத்தளபதிகளுடன் பிரேமா ஆலோசனை அமைச்சர் ஹமீதும் கலந்துகொண்டார்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தம் தொடர்பாக நிலைமைகளை அறியும் பொருட்டு ஜனதிபதி திரு. பிரேமதாசா அமைச்சர் ஹமீத்தையும், முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனதிபதி மாளிகையில் இச்சந்திப்பு நடைபெற்றது. அப்போது ஜனதிபதி முக்கிய ஆலோசகர்கள் பலரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினரெனத் தெரியவருகிறது

பல மணி நேரம் வரை நடைபெற்ற இப்பேச்சுக்களில் வடக்கு-கிழக்கின் சகல நிலைமைகள் பற்றியும் ஜனதிபதி க்கு விபரமாகக் கூறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## யுத்தத்தை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசுக்கு உலகநாடுகள் கோரிக்கை

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுவரும் யுத்தத்தை உடனடியாக முடிவிற்குக்கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்குமாறு பல நாடுகளும் அரசைக் கேட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது.

பிரிட்டன், அமெரிக்கா இந்தியா, பிரான்ஸ் உட்பட வேறும் சில நாடுகள் இவ்வாறு இலங்கை அரசை வற்புறுத்தி

(6ம் பக்கம் பார்க்க)

## மோதலுக்கான காரணம்

(கொழும்பு)
''தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாததன் காரணமாகவே, வடக்கு-கிழக்கில் மீண்டும் மோதல்கள் இடம் பெறும் சூழ்நிலை உருவாகியுள்ளது'' என ராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, அவசர காலச் சட்ட

(6ம் பக்கம் பார்க்க)

## கிரானில் 60 படையினர் பலி! கடும் சண்டை நடக்கிறது

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் கிரான் அதிரடிப்படை முகாமைச் சுற்றி வளைத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தாக்குதலில், சுமார் 60 அதிரடிப்படையினர் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான இத்தாக்குதல், நேற்று மாலையும் தொடர்ந்து இடம்பெறுவதாக பி. பி. ஸி. மாலைச் செய்தி தெரிவித்தது. விடுதலைப் புலிகள் ரொக்கட், மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்தது. (சி)

## "தற்போதைய சண்டை முடிவுக்குகொண்டுவரப்படவேண்டும்' -ஈ. பி. டி. பி. அறிக்கை

(கொழும்பு)
தமிழ் பிரதேசங்களில் தற்பொழுது நடைபெற்றுவரும் சண்டை முடிவுக்கு கொண்டு வரப் படவேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: ''தற்போதைய யுத்தத்தினுல்

(6-ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஒரு லட்சம் மக்கள் அகதிகள்

(யாழ்ப்பாணம்)
அரசபடையினர் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொண்ட கடுமையான தாக்குதல் நடவடிக்கைகளினுல் ஒரு லட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளார்கள்.

பொம்பர், ஹெலி, பீரங்கி தாக்குதல்களினுல் இவர்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து கோவில்கள், [illegible] கிறிஸ்தவ ஆலயங் [illegible] ஆகியவற்றில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரான், சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டி, வந்தாறுமூலை, ஏருவூர், செங்கலடி ஆகிய இடங்களிலுள்ள மக்களே இவ்வாறு இடம் பெயர்ந்து உள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள வீடுகள் உட்பட பல கட்டிடங்கள் இத்தாக்குதல்களினுல் சேதமடைந்துள்ளன. (153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimson Globe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறும் டின் ரூபா 150-00. தேவைக்கு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3986)

### தவறிவிட்டது

15-6-90 வெள்ளிக்கிழமை அன்று நண்பகல் 12-1க்கும் இடையில் கொழும்புத்துறை மினி பஸ்ஸில் பிரயாணம் செய்த போது ஆதிலட்சுமி சின்னராசா ஓடக்கரை பருத்தித்துறை என்பவருடைய அடையாள அட்டையும் மற்றும் வேறு பொருட்கள் உள்ளடக்கிய கைப்பை (பேஸ்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-3997)

# "அதிகாரிகளின் கட்டளையை மீறி சிறீலங்கா படைகள் யுத்தநிறுத்தத்தை மீறுகின்றன"

-வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

''நாங்கள் யுத்த தர்மத்தை மதிப்பவர்கள் அதனால்தான் சிறீலங்கா அரசு யுத்தநிறுத்தத்திற்கு முன்வந்தபோது, நாமும் அதற்கு உடன்பட்டோம். ஆனால் சிறிலங்காப் படைகளில் உள்ள பலர் தமது உயர் அதிகாரிகளின் கட்டளைகளுக்கு மதிப்பளிக்க மறுத்து போர் நிறுத்தத்தை அடிக்கடி மீறிவருகிறார்கள். நாம் மனித தர்மத்தை மதிப்பவர்கள் அதனால்நான் கோட்டையில் எம்மால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கும் அரசின் படைகளுக்கு உணவு கொடுத்தோம் ஆனால் அவர்கள் எமது உணவை உண்டுவிட்டு எமது மக்களையும் எம்மையும் ஷெல் அடித்துக்கொல்ல முற்பட்டார்கள்''

இவ்வாறு நெல்லியடி வீரசக்தி கோவில் மைதானத்தில் நடைபெற்ற போர்க்கால அவசரக் கூட்டத்தில் பேசும் போது விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர் திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''சிறிலங்கா அரச படைகளில் சில நாசகாரிகள் நுழைந்திருக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் அடிக்கடி போர்நிறுத்தத்தை மீறிவருகிறார்கள்.

''போர் நிறுத்தத்தை அடிக்கடி மீறி அவர்கள் எம்மையும், எமது மக்களையும் அழிக்க முயலும்போது நாம் மட்டும் பொறுமையாக இருக்க முடியுமா? போர்நிறுத்தம் என்பது ஒரு கானல்நீர்போலவே எமது கண்களுக்குத் தெரிகிறது. இந்தக் கானல்நீரை நம்பி பொதுமக்களாகிய நீங்கள் கற்பனைகளில் மிதக்காமல் இந்தப் போர்க் காலச் சூழ் நிலையில் போராளிகளான எம்மோடு இணைந்து சகல வழிகளிலும் ஒத்துழைப்புத் தாருங்கள்''.

9 பேர் கொண்ட அவசர பாதுகாப்புக் குழு ஒன்றும் திரு. வாஞ்சிநாதனால் அங்கு ராார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

# இப்படியும் நடக்கிறது

'திரிபோஷா' பற்றி ஒரு தகவல் வெளியிட்டிருந்தேன் அல்லவா?

அதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள அகில உலக செயர் [CARE INTERNATIONAL] ஸ்தாபன பிரதிப்பணிப்பாளர் திரு. ம. பத்திநாதன் பின்வருமாறு மறுப்புத் தெரிவித்துள்ளார்:

''தங்கள் 14-6-90 பத்திரிகையில் 'இப்படியும் நடக்கிறது' என்ற பகுதியல் மூன்றுமாத இடைவெளிக்குப் பின்னர் பாவனைக்குதவாத 'திரிபோஷா' யாழ் வைத்திய அத்தியட்சகர் பகுதிக்கு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக நான் யாழ் சுகாதார அத்தியட்சகர் திரு. கனகசபை, யாழ். சுகாதார வைத்திய அதிகாரி திருமதி கதிர்காமர், யாழ். அரசினர் வைத்தியசாலை பொறுப்பாளர் என்போருடன் தொடர்புகொண்டேன். அவர்கள் இம்முறை வழங்கப்பட்ட 'திரிபோஷா' தரமானது என்பதை உறுதிசெய்துள்ளனர். இதைவிட வழங்கப்பட்ட திரிபோஷாவை நான் நேரில் பரிசீலனை செய்து அது தரமானது என்பதை உறுதிசெய்து கொண்டேன்'' என்று எழுதியுள்ளார்.

● குறிப்பு: இவ்விஷயம் தொடர்பாக எமக்குத் தகவல கொடுத்த நமது பண்டத்தரிப்பு நிருபருடன் தொடர்பு கொண்டேன். நமது நிருபரின் கருத்து இது:

''திரிபோஷா குறித்து நான் அனுப்பிவைத்த செய்தி உண்மையானது. எங்கள் வைத்தியசாலைக்கும் கிடைத்த மா மிகவும் தரமற்றதாகவும், வண்டுகள் மலிந்ததாகவும் காணப்படுகின்றது. ஏனைய இடங்களிலும் இவ்வாறு இருந்ததாக சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்ததினால் தான் இச்செய்தியை எழுதவேண்டி ஏற்பட்டது...''

அடிக்குறிப்பு: 'திரிபோஷா'மாவை பரிசீலனை செய்தாலும், முழு மாவையும் துருவி ஆராய்வது ஒரு கஷ்டமான காரியமாகும் என்பது எமக்குப் புரிகிறது.

'ஊடுருவி'

## உலககிண்ண உதைபந்தாட்டம்:
# பிரேஸில் மீண்டும் வெற்றி

இத்தாலியில் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் 2வது சுற்று ஆட்டங்களில் விளையாடுவதற்கு பிரேஸில், மே. ஜெர்மனி செக்கோஸ்லவாக்கிய நாடுகளின் கோஷ்டிகள்தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### மே. ஜெர்மனி வெற்றி

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் 'டி' பிரிவில் மே. ஜெர்மனிக் கோஷ்டி ஐக்கிய அரபுக் கோஷ்டியை 5-1கோல்களால் மிக இலகுவாக வெற்றி பெற்று, 2-வது சுற்று ஆட்டங்களில் விளையாடுவதற்கு தெரிவாகியுள்ளது.

### ஒஸ்றியா தோல்வி

'ஏ' பிரிவு ஆட்டம் ஒன்றில் செக்கோஸ்லாவாக்கியக் கோஷ்டி - ஒஸ்றியா கோஷ்டியை 1-0 கோல்களால் வெற்றிபெற்று, 2வது சுற்று ஆட்டங்களில் விளையாடத் தெரிவாகியுள்ளது.

செககோஸ்லாவாக்கியக் கோஷ்டி ஆட்டம் தொடங்கி 16வது நிமிடத்தில்'பெனால்டி' மூலம் மேற்படிகோலைப்போட்டது.

### பிரேஸில் மீண்டும் வெற்றி

நேற்று முன்தினம் நடைபெற்ற 'ஸி' பிரிவு ஆட்டங்களில், உலக கிண்ணத்தை மூன்று தடவைகள் வெற்றி கொண்ட பிரேஸில் - கொஸ்ரிறிக்கா கோஷ்டியை 1-0 கோலால் வெற்றிபெற்று 2வது சுற்று ஆட்டங்களில் விளையாடத் தெரிவாகியுள்ளது.

### ஸ்கொட்லண்ட் வெற்றி

மற்றுமொரு 'ஸி' பிரிவு ஆட்டத்தில் ஸ்கொட்லண்ட் கோஷ்டி-சுவீடன் கோஷ்டியை 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் இடைவேளை வரை தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. ஆட்டம் முடிவடைவதற்கு 21 நிமிடங்கள் இருக்கும்போதுஸ்கொட்லண்ட் கோஷ்டியினர் மேலும் ஒரு கோலைப் போட்டு வெற்றி பெற்றது.

### சமமான முடிவு

'எவ்' பிரிவில் இங்கிலாந்துக் கோஷ்டிக்கும்-ஐரோப்பிய சாம்பியனான ஹொலந்து கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற விறுவிறுப்பான ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் இறுதிவரை கோல்கள் போடாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இப்போட்டியில் இரு கோஷ்டிகளும் பல கோல்களைப் போடும் கட்டங்களை நழுவவிட்டவண்ணமே இருந்தன.

மேற்படி பிரிவில் பங்குபற்றும் கோஷ்டிகள் அனைத்தும் இதுவரை தோல்வியடையாத நிலையில் இருப்பதால் எந்தக் கோஷ்டிகள் 2-வது சுற்று ஆட்டங்களில் விளையாடத் தெரிவாகப்போகின்றன என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கின்றது

இத்தாலியில் நடைபெற்று வரும் 14வது உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற போட்டி முடிவுகள்.

'ஈ' குறூப்பில் பெல்ஜியம் உருகுவேயை 3—1என்றகோல்கள் வித்தியாசத்திலும் அதே குறூப்பில் ஸ்பெயின் தென் கொரியாவை 3-1 என்றகோல்கள் வித்தியாசத்திலும் கோற்கடித்துள்ளன.

''எப்'' பிரிவில், அயர்லாந்தை எதிர்த்து மோதிய எகிப்து திறம்பட இருகோஷ்டிகளும் கோல்கள் ஏதும் போடாத நிலையில்இருந்தனர்.

### இன்றைய ஆட்டங்கள்

'ஏ' பிரிவில் இன்று இரு ஆட்டங்கள் நடைபெறுகின்றன: இத்தாலியை எதிர்த்து செக்கோஸ்லாவாக்கியவும்: ஆஸ்ரியாவை எதிர்த்து ஐக்கிய அமெரிக்காவும் மோதுகின்றன.

'டி' பிரிவிலும் இன்று இரு ஆட்டங்கள் நடைபெறுகின்றன: மே. ஜேர்மனியை எதிர்த்து கொலம்பியாவும்; யுக்கஸ்லாவியாவை எதிர்த்து ஐக்கிய அமெரிக்காவும் மோதுகின்றன. (வி)

## வடக்கு - கிழக்கில்
# செய்திகளை மறைக்க தொலைபேசி துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்தம் மீறல் பற்றிய விவரங்கள் கொழும்புக்கோ, வெளிநாடுகளுக்கோ தெரியவராமல் மூடிமறைப்பதறகாகவே வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான தொலைபேசித் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கண்ட துண்டிப்பு பற்றி விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்கான தொலைபேசி சேவைகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சீர்குலைந்திருந்தன. ஆனால் கடந்த சனிக்கிழமை காலையில் அமைச்சர் ஹமீத் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த போது மீண்டும் இயங்கத் தொடங்கிய இச்சேவை மாலை 5-30 மணியளவில் அவர் பலாலியிலிருந்து புறப்பட்டதும் மீண்டும் செயல் இழந்தது.

நேற்று முன்தினம் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி விடுதலைப்புலிகளின் தலைவர்கள் அரசுக்கு கடும் ஆட்சேபமும் கண்டனமும் தெரிவிக்க முயன்றனர். ஆனால் அரசுத் தலைவர்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ளமுடியவில்லை. வடக்கு கிழக்கு மாகாணங்கள் எல்லாவற்றிலும் தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. (153)

## 4வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் அருண் பிரசன்ன கர்வாலியோ

யாழ்ப்பாணம் அடப்பன் ஸ்ரேட் இலக்கம் 11ஐ சேர்ந்த யோசப் சேவியர் றெசாறி ஜெம்மா தம்பதியினரின் அன்பு மகன் அருண் பிரசன்ன கர்வாலியோ தனது நாலாவது பிறந்த தினத்தை (19-6-90) இன்று மன்னாரில் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். மரியன்னை அருள் பெற்று நலமுடன் வாழ்க என அம்மா, அப்பா, உற்றார் உறவினர் வாழ்த்துகின்றனர். (சி 3994)

## இராமநாதன் கல்லூரி பவள விழா நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் கல்லூரி பவளவிழா பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2-30 மணிக்கு நடைபெறும்.

16-ம் திகதி நடைபெறவிருந்த பவளவிழா மலர் வெளியீடு நாளை புதன் கிழமை பி. ப. 2-30 நடைபெறும். கலை நிகழ்ச்சிகள் இரு தினங்களிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

## 11து ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசமணி மகேசன்

தோற்றம்: 02-02-1909  மறைவு: 19-06-1979

அன்பின் திருவுருவே! ஆண்டுகள் பல சென்றாலும் தங்கள் நினைவுகள் எமது மனதை விட்டு அகலா. தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;

அன்பு மறவாத
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்

'லிங்கவாசா'
நவாலி.

(சி-3995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''நேரம் பொன்னுனது. எனவே நேரத்தை கவன மாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள்.''

—மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## யாகாவாராயினும்....!

''யாகாவாராயினும் நாகாக்க...!'' என்றுதான் திருவள்ளுவர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

தீயினுற் சுட்டபுண் ஆறிவிடும்...! ஆனுல் நாவினுற் சுட்ட வடுவோ எளிதில் மாறிவிடாது.

இவற்றை எண்ணுமற் பேசிப் பல துன்பங்களை விதைத்துவிடாமல் இருக்கவேண்டும்.

குறிப்பாக, பொதுவாழ்விற்கு வந்துவிட்டவர்கள் இதன் ஆழத்தை எண்ணி, நெருக்கடிகள் நிலை வந்து விட்டாலும். நிறைகுடம் தளம்பாது நிற்பதுபோல நின்று, நாகாக்க வேண்டும்;

ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர், நீதியோடு சகல ருக்கும் அமைதி வழங்க இருப்போர் கண்டபடிபேசி அமைதியைக் கெடுப்பது அழகல்ல.

1958ல், அமரர் பண்டாரநாயக்கா ஆட்சியிலிருந்த போது, நுவரெலியாவில் நடந்த சிறு தனிப்பட்ட சம்பவத்தைப் பெரிதுபடுத்திச் சில வார்த்தைகளை உதிர்த்துவிட்டார்.

அவை வானெலியிலும் பல தடவைகள் வந்ததால். விளைந்த அனர்த்தங்களை. வன்செயல்களை நாம் மறந்துவிடமுடியுமா?

ஆத்திரப்பட்டு, வார்த்தைகளை அளக்காது கொட்டிவிட்டு, பின்னர் விசனப்படுவதிற் பயனில்லை.

உணர்ச்சி வசப்பட்டு விளைவுகளை எண்ணுது, ஆட்சியிலிருப்போர், பொறுப்புணர்ச்சியோடு பேசவேண்டுமென்பதை வள்ளுவர் அறிவுறுத்தியதைத்தான் மறந்தாலும், கடந்தகாலச் சம்பவங்களை, அனுபவங்களை மறந்துவிடலாமா?

இதை இங்கு வலியுறுத்திக் கூறுவதன் காரணம் என்ன?

அண்மையில் அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன. இடையிடையே உணர்ச்சி வசப்பட்டு, பேசும் வார்த்தைகள்தான் என்ன?

பெரும்பான்மை மக்களின் சீற்றத்தை அடக்குவதற்காக என எண்ணிக்கொண்டு, பாதிக்கப்பட்ட உரிமைகள் இழந்து அதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் வேதனைகள் அதிகரித்த வேளையில் வேல் பாய்ச்சுவது போன்ற சொற்களைப் பயன்படுத்துவதாற் பிரச்சனைகள் தீர்ந்துவிடுமா?

மக்களுக்கு இன்று தேவையானது. இனப்பிரச்சனையை விரைவாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளே; வெறும் வார்த்தைப் பிரயோகங்களல்ல.

பொறுப்பான பதவியிலிருப்போர் இதனை உணர்ந்து நடப்பதால் நாட்டின் நெருக்கடி நிலையைத் தணிக்க உதவுபவர்கள் ஆவார்கள்.

# ''குடிமைத் தொழில்முறை வேரோடு களைய அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

குடிமைத்தொழில்முறையை ஒழித்து சமூக ஏற்றத்தாழ்வற்ற தமிழீழத்தை உருவாக்குவதில் உறுதியான கொள்கையோடு பணியாற்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்கு; சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் பாராட்டுதலையும் வரவேற்பையும் தெரிவித்துள்ளது.

மேற்படி சமாசத்தின் மகா சபைக்கூட்டத்தில் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட குடிமைத்தொழில் முறை ஒழிப்புப் பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

''சாதிபேதமற்ற சமுதாய நீதிபேணும் பண்பாட்டு வளர்ச்சி பெற்றவர்களாக ஈழத் தமிழினம் உயர்வுபெற குடிமைத் தொழிற் சேவையைப் பெறுவோரும், வழங்குவோரும் மற்றும் முற்போக்கு சக்திகளும் ஒன்றுபட்டு கருத்தொருமித்து குடிமைத் தொழில் முறையை வேரோடு களைய முன்வரவேண்டும்.

அத்துடன் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும், அதனது அங்கத்துவ ஸ்தாபனங்களும் குடிமைத்தொழில் முறை ஒழிப்புத்திட்ட அமுலாக்கலில் தீவிரமாகத்தங்களை ஈடுபடுத்த வேண்டும்.

''சாதியின் பெயரால் தமிழ் இனத்தில் நிலவும் அநாகரிகமான, அடக்குமுறைகளையும் அடிமைத்தளைகளையும் உடைத்தெறிந்து மனித சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் நிலைநாட்டப் பல்வேறுபோராட்டங்கள் தியாகங்கள் மூலம் எம்முன்னேடிகள் மறுக்கப்பட்ட பல உரிமைகளை வென்றெடுத்து சாதிக்கொடுமையின் தாக்கத்தைக் குறைத்துள்ளனர்.

ஆயினும் இவ்வடிமைத்தனம் முற்றாக ஒழிக்கப்படாமைக்கு சாதிப்பிரிவினையின் ஆணிவேராக விளங்கும் குடிமைத்தொழில் அமைப்புமுறை தொடர இடமளிக்கப்பட்டமையே முக்கியகாரணமாகும்.

''மக்களின் மனமாற்றம் புதியவர்கள் குடிமைத்தொழிலில் ஈடுபடாமல், தடுத்தல், கல்வித்துறையிலும் தொழிற் பெயர்ச்சியிலும், கரிசனையை வளர்த்தல் போன்ற யுக்திகளைக் கையாண்டு குடிமைத் தொழிலை ஒழித்தற்கு சாதகமான ஒரு சூழ்நிலையை சமாசம் துரிதமாக உருவாக்கி வந்துள்ளது''

## மெதடிஸ்த மிஷனரியின் 176-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை மெதடிஸ்த மிஷனரியின் 176 வது ஆண்டு விழா பருத்தித்துறை – கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தினுல் இம் மாதம் 29ம் திகதி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இலங்கையில் முதன் முதலில் மெதடிஸ்த மிஷனரிமார் வந்து இறங்கிய தினம் ஜூன் மாதம் 29ம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் பருத்தித்துறை - கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்திற்குட்பட்ட ஆலயங்களில் மாலை நான்கு மணிக்கு விசேட ஆராதனையும். ஜூன் 30ம் திகதி காலை பத்து மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயத்தில் வாலிபர்களுக்கான வேதாகமப் பொது அறிவுப் போட்டியும், மாலை மூன்று மணிக்கு மெதடிஸ்த சேகரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்துடன் மெதடிஸ்த விழா முடிவடையும் 176வது மெதடிஸ்த விழா பருத்தித்துறை-கட்டைவேலி மெதடிஸ்த சேகரத்தின் முகாமைக்குரு வண. எஸ். எஸ். ஞானராஜா தலைமையில் நடைபெறும். (54)

## தொண்டர்களுக்கு சுயதொழில் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். சைவத் தொண்டர் நிலையம் தொண்டர்களுக்குச் சுயதொழில் வாய்ப்புக்கான பயிற்சிகளை அளித்து வருகின்றது,

நிலைய அமைப்பாளர் திரு. இ. சுவாமிநாதன் இப்பயிற்சிக்கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வருகின்றூர்.

சவர்க்கார உற்பத்தித் தொழில் பற்றிய செய்முறைப் பயிற்சிகள் சைவத்தொண்டர்களுக்கு மில்க்வைற் தொழிலகத்தில் அளிக்கப்பட்டது. [54]

## முடிவு திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைப் பகுதிச் சன சமூக நிலையங்களின் சமாசத்தினுல் நடாத்தப்படும் கல்வி, கலை, கலாசார விழாப்போட்டிகளின் முடிவு தினம் இம் மாதம் 20ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் சகல சன சமூக நிலையங்களும் பங்குபற்றவேண்டுமென்றும், அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்படும் மரபு வழி இசை நாடகத்தில் முதற்பரிசாகத் தங்கப் பதக்கம் வழங்கப்படுமென்றும், கட்டுரைப்போட்டி இம்மாதம் 30ம் திகதி காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென்றும் கல்வி, கலை, கலாச்சாரக் குழுத்தலைவர் கவிஞர் தேவதாசன் அறிவித்துள்ளார்.

# பலதும் பத்தும்

## 'பொம்மர் தாக்குதல்'

போருக்கும் சில நெறிமுறைகள் உண்டு.

பொதுமக்கள் மீதா 'பொம்மர்' தாக்குதல்...?

ஏதுமறியாத அப்பாவிமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

வேறிடங்களிற் கிளர்ச்சிகள் நடைபெற்றன...பொம்மர் தாக்குதல்... ஹெலி தாக்குதல்... கேள்விப்பட்டதுண்டா? அது 'அவர்கள்' மக்கள்...!

தமிழ்பேசும்மக்கள் இரண்டாந்தரப் பிரசைகள் என்பதை இச்செயல்கள் காட்டவில்லையா...?

எதிர்க்கட்சியினரின் 'நீதியை' நியாயமான பேச்சை, இத்தகைய சந்தர்ப்பங்களில் அறியவாய்ப்புண்டு.

பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களையிட்டு ஏதாவது இரக்கம்... அனுதாபம்...! எதுவுமே கண்டிப்பாகக் காணப்படவில்லை.

அரச பயங்கரவாதம்... இது சர்வதேசப் பிரச்சனை... மனித உரிமைமீறல்கள் பற்றி உலகம் கவனித்துத் தான் வருகிறது.

மனித உரிமைக்கழகத்தில் இருந்த உறுப்புரிமையை அண்மையில் இலங்கை இழந்துவிட்டது.

குண்டுத்தாக்குதல்கள் உலகக்கணிப்பை உறுதிசெய்கின்றதா...?

பின்விளைவுகள், மக்களின் உளப்பாதிப்புகள், பொருளாதார அழிவுகள்— இவை பற்றி அரசு எண்ணிப் பார்க்க வேண்டாமோ...?

வாணி

## போக்கட்டி பாடசாலைக்கு அடிப்படை வசதிகள் தேவை

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த போக்கட்டி ஆர். ரி. த. க. பாடசாலையின் அடிப்படைத்தேவைகள் அனேகமானவை நிவர்த்தி செய்யப்படவேண்டுமெனப் பெற்ரேர் கோரிக்கை விட்டுள்ளனர்.

அக்கோரிகையில் தெரிவிப்பதாவது; ''இப்பாடசாலை ஒரு பின்தங்கிய கிராமத்தில் அமைந்துள்ளது. 1901ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

இப்பாடசாலை இப்போது 5ம் ஆண்டு வரை வகுப்புகளும் அதிபர், இரு பெண் ஆசிரியர்கள், சுமார் 75 மாணவரும் உள்ளனர். பாடசாலையின் பிரதான பொருள்களை வைத்தெடுக்கக்கூட வசதியான இடமில்லை, வெளியான கட்டிடமாகவுள்ளது.

இங்கே மலசல கூடம் கிடையாது. நீர் வசதியும் கிடையாது, ஆசிரியர் பற்றுக்குறை இங்கே தீர்க்கப்படவேண்டும். கிராமப் புறப் பாடசாலையை முன்னேற்ற வைப்பது அதிகாரிகள் கடமையல்லவா. இப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தப்படவேண்டுமெனக் கேட்கப்படுகிறது.

## ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழா

[பண்டத்தரிப்பு]

கருகம்பானை, மயிலங்கூடல் என்ற இடத்தில் புதிதாக நிறுவப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட யாழ். பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை புதிய கட்டிடத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

தெல்லிப்பழை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரம் தலைமையில் இத்திறப்பு விழா நடைபெற்றது. [72]

## அளவைக் கருவி முத்திரையிடத் தவறினுல்...

(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தின் அளவைகள் நிறுவைகள் பிரிவினுல் வர்த்தகர்களின் அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு முத்திரை இடும் வேலைகள் கிளிநொச்சி, பளை, சங்கானை, தெல்லிப்பளை, உடுவில், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளில் முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் இவ் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு நேரடியாகச் சென்று முத்திரையிடப்படமாட்டாது என்றும், இப்பகுதிகளில் தமது அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடத் தவறியவர்கள் யாழ். செயலகத்திற்கு வந்து முத்திரையிட்டுக்கொள்ள வேண்டுமென்றும் பரிசோதகர் திரு. க. ஜெறூபேந்திரன் அறிவித்துள்ளார். (54)

## அலங்கார உற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மேற்கு அருள்மிகு ஸ்ரீ முருகையா கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 14ம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

இக்கோவில் திருவிழாக்கள் தொடர்ந்து பத்துநாட்கள் வரை நடைபெற்று இறுதி நாளான இம்மாதம் 23ம் திகதி சனிக்கிழமை மகேசுர பூஜையான அன்னதானமும் இடம்பெறவுள்ளது. (139)

## வீதி ஒழுங்கு பயிற்சி நெறி

(வட்டுக்கோட்டை)

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கம் நடாத்தும் ''வீதி ஒழுங்கும் வீதிப்பாதுகாப்பும்'' என்னும் பயிற்சி நெறி இம்மாதம் 22ம் திகதி வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு 15 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாமென்றும், மாணவ மாணவிகளுடன் பொறுப்பான ஆசிரியர் ஒருவர் கலந்துகொள்ள வேண்டுமென்றும் ஒரு பாடசாலையிலிருந்து ஆறுபேருக்கு மேல் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்களென்றும் சாரணர், மாணவ தலைவர்கள், சாரணியர்கள் கலந்துகொள்வது விரும்பத்தக்க தென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது,

மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் இப்பயிற்சி நெறி தொடர்பான சுற்றறிக்கையை காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கப்பிரிவுக்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழருக்கு எதிரான சட்டமூலத்தை ஐ. தே. கட்சி அரசே கொண்டு வந்தது"

## பாராளுமன்றத்தில் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்றம் சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச். முகம்மது தலைமையில் கூடியது.

அவசரகாலச் சட்டத்தை இன்னும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணையை பாராளுமன்ற அலுவல்கள், சுற்றுடற்துறை அமைச்சர் திரு. வின்சன்ற் பெரேரா சபையில் சமர்ப்பித்தார்.

### "பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை"

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் விவாதத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய அநுராதபுரம் மாவட்டப் பாராளுமன்றப்பிரதிநிதி திரு. கே. பி. ரட்ணயக்கா, "இன்றைய அரசாங்கம் ஒரு வருட காலத்துக்கும் அதிகமாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. பேச்சுவார்த்தைகள் நடப்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆயினும் அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை இந்தப் பாராளுமன்றத்திற்கு முன்போ அன்றேல் பொதுமக்கள் முன்னிலையிலோ சமர்ப்பிக்கப்படவில்லை. வெளிப்படையாக இடம்பெறாத பேச்சுக்களினாலேயே இன்றைய இந்த நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

அவர் மேலும் பேசுகையில், "விடுதலைப் புலிகள், இந்தியப் படைகள் வெளியேறிய பின்னர் திட்டமிட்டு மேற்கொண்டதே இந்த யுத்தம். சமரசப் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு யாழ்ப்பாணம் சென்றுள்ள அமைச்சர் ஹமீது, பாராட்டப்பட வேண்டியவர். அவர் வெற்றிகரமாகத் திரும்புவதற்கு 'அல்லாஹ்' துணை புரியவேண்டும்'' என்றார்.

### "தமிழரின் கஷ்டத்துக்கு யு. என். பி. காரணம்"

"தமிழர்களுக்கு எதிரான 6வது திருத்தச் சட்டமூலத்தைக் கொண்டுவந்தது ஐக்கிய தேசியக் கட்சியாகும். 1977ம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் படும் அவஸ்தைகளுக்குக் காரணமும், காரணகர்த்தாக்களும் ஐக்கிய தேசியக் கட்சியினரே'' என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அங்கத்தவரான திரு. கே. பி. ரட்ணயக்கா அரசாங்கத்தை வன்மையாகச் சாடினார்.

### "தமிழ்மக்களை கருமேகம் சூழ்ந்துள்ளது"

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. காசிநாதர் பேசுகையில், "வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள நிலையால் பொதுமக்கள் பெரிதும் அல்லற்படும் அவலம் ஏற்பட்டுள்ளது. சிங்கள மக்களைச் சூழ்ந்திருந்த கருமேகங்கள் கலைந்துவிட்டன. இன்று அது தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்புக்கு பல்வேறுபட்ட தேவைகளுக்காக வந்த தமிழ் மக்கள்போக்குவரத்து வசதியின்றி திரும்பி தமது இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது கொழும்பில் தங்கியுள்ள இவர்களை, கடல் அல்லது ஆகாய மார்க்கமாக தமது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும்'' என்றார்.

### "நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும்"

"வடக்கு கிழக்குமாகாணத்தில் நிலவும் எரிபொருள் உணவுத்தட்டுப்பாட்டை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தமிழ் மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் அரசாங்கம்தனது பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### அரசின் மீது கண்டனம்

விவாதத்தில் தொடர்ந்து கலந்து கொண்டு உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் பலரும், அரசாங்கத்தின் துரதிருஷ்டி அற்ற போக்கே இன்றைய இந்நிலைக்குக் காரணம் என்று சாடினார்கள்

"ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த திரு. கருணாகரன் உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கு விடுதலைப் புலிகளின் பொறுப்பற்ற செயலே காரணமாகும். எண்ணற்ற மக்கள் மிகுந்த நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி வந்த விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் நம்பிக்கையை இழந்துவிடும் விதத்தில் செயற்பட்டது கவலைக்குரியது'' என்றார்.

### அரசு அறிக்கை வேண்டும்

ஐக்கிய சோஷலிச முன்னணி அங்கத்தவர் திரு. அத்தாவுட செனிவரத்ன பேசுகையில்; "அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இதுவரை காலம் நடாத்தி வந்த பேச்சுவார்த்தைகள் பற்றி பொது மக்களோ, அரசியல்கட்சிகளோ, பாராளுமன்றமோ அறிந்திருக்கவில்லை. இது குறித்து பூரணமான அறிக்கையை அரசாங்கம் சபையில் சமர்ப்பிக்கவேண்டும். ஆயுதங்களைப் பாதுகாப்பு படையினரே வைத்திருக்கவேண்டும். விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையாது விட்டது இந்த நிலைக்குக் காரணமாகும்'' என்றார்.

---

## 'ஷெல்' தாக்குதலின் விளைவு

# காவலூரில் கடைகள் வீடுகள் பலத்த சேதம்!

(வேலணை)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் ஏவப்பட்ட 'ஷெல்' தாக்குதல்களினால் ஊர்காவற்றுறை நகரில் உள்ள பல வர்த்தக நிலையங்களும் வீடுகளும் சேதமடைந்தன.

இதன் காரணமாக 20-க்கு மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுக்குள்ளானார்கள். வயோதிபர் ஒருவர் 'ஷெல்' தாக்குதலின் அதிர்ச்சிக்குட்பட்டு மரணமானார்.

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் பலர் பயப்பீதியின் நிமித்தம் வெளியேறிவிட்டனர்.

ஊர்காவற்றுறை நகரப் பகுதி மற்றும் அதனையொட்டிய கரையோரப் பகுதிகளிலிருந்து மக்கள் அகதிகளாக வெளியேறி, நாரந்தனை வேலணைசாட்டி பகுதிகளில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்தனர். இவர்களுக்கு ஊர்காவற்றுறை தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிறிஸ்தவ குருமார்கள் வேண்டிய உதவிகளை வழங்கினர்.

'ஷெல்' தாக்குதல்களினால் இறங்கு துறைமுகமேடை பலத்த சேதத்துக்குள்ளானது. இங்குள்ள பிரயாணிகள்தங்கு மண்டபமும் தரைமட்டமானது. துறைமுகத்தில் காணப்பட்ட நிழல்தரும் பெரிய ஆலமரமும் முறிந்து விழுந்தது.

ஊர்காவற்றுறை கடல்வழியாக தீவுப்பகுதிக்குச் செல்லும் மின்சார கேபிள்கள் ஷெல் தாக்குதலினால் சேதமாக்கப்பட்டதினால் தீவுப் பகுதிக்கான விநியோகம் ஸ்தம்பித்தது. இதனால் குழாய் நீர் விநியோகம் மின்சாரத்தினால் இயங்கி வந்த பல தொழிற்சாலை வேலைகள் யாவும் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலைமை இவ்வாறிருக்க யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணித்தாய் ஒருவர், யாழ். நகரில் மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலினால் பீதியடைந்து அங்கிருந்து வெளியேறி அராலி கடல் பாதை வழியாக வேலணைக் கரைக்குச் சென்று அங்கிருந்து மூன்றுமைல் தூரமான வேலணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்த சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது.

---

## இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

நச்சுத் திராவகம் அருந்திய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட, அளவெட்டியைச் சேர்ந்த கமலா (20 வயது) என்ற இளம்பெண் மரணமானார். கடந்த 15ந் திகதி காலை அனுமதிக்கப்பட்ட இவர், அன்றிரவு மரணமானார். உறவினர்கள் வராததால் கடந்த 4 நாட்களாகச் சடலம் பிரேதச சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

---

## மினிபஸ் கட்டணம் அதிகரிப்பு

[வடமராட்சி]

யாழ். பிரதேசத்தில் சேவையிலீடுபடும் மினிபஸ்களில் போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இவ்வாறு கட்டணங்கள் உயர்த்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த 15-ம் திகதி முதல் மினிபஸ் கட்டணம் உயர்வடைந்துள்ளது. (51)

---

## இராசி பலன்

19 - 06 - 1990

செவ்வாய்க்கிழமை

மேடம்: உதவிக்குச்சென்று உபத்திரவப்படல், யோசனை, பீடை.

இடபம்: புதுயோசனை, பொருட்செலவு, இடமாற்றம்.

மிதுனம்: சமூகசேவை, செல்வாக்கு, நற்சிந்தனை.

கடகம்: குடும்பசுகம், கௌரவம், சுபகாரியம்.

சிங்கம்: வாகனசுகம், சோம்பல், கடினசித்தம்.

கன்னி: தொழிற் சித்தி, விரோதம், செலவு.

துலாம்: புண்ணியச்செலவு, செல்வாக்கு, பயம்.

விருச்சிகம்: சமூகசேவை, நிதானமின்மை, பலவீனச் செயல்.

தனுசு: வீண் குழப்பம், நீசர்நேசம், கடன்.

மகரம்: பொய்பேசுதல், நிம்மதியின்மை, செலவு.

கும்பம்: ஆடம்பரம், சஞ்சலம், மாற்றம்.

மீனம்: இனசன உதவி, ஏமாற்றம், நற்சிந்தனை.

இ. மகாதேவா

---

## இரு தடவைகள் கோண்டாவிலில் 'ஷெல்' வீச்சு குண்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கில் கடந்த சனி ஏற்பட்ட இரு சம்பவங்களில் பொதுமக்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

சனிக்கிழமை காலை பலாலியிலிருந்து ஏவப்பட்ட இரண்டு மோட்டார் 'ஷெல்'கள், கோண்டாவில் ரெயில் நிலையம் முன்பாக விழுந்து வெடித்ததில் தென்னைமரமும், மாமரமும் சேதமடைந்தன.

இதேபோல, இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 200 யார் தூரத்தில் சனிக்கிழமை மாலை 'ஹெலி'யில் இருந்து இரு தடவைகள் குண்டு வீச்சு நடந்தபோதும், பொதுமக்களுக்குக் காயம் ஏற்படவில்லை.

---

## மக்கள் வெளியேற்றம்

(புத்தளம்)

கடந்த சில நாட்களாக குரும்பசிட்டி மக்கள் தங்கள் வீடுகளை விட்டு குழந்தை குட்டிகளுடனும், தங்கள் வீட்டுப் பொருட்களுடனும், காரிலும், லொறியிலும், குப்பிளான் ஊடாக மல்லாகம், சுன்னாகம், அளவெட்டி முதலிய இடங்களுக்கு குடிபெயர்ந்து செல்வதைக் காணமுடிகிறது.

இவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் இலங்கை இராணுவத்தாலும் இந்திய இராணுவத்தினாலும் பாதிக்கப்பட்டு திரும்பவும் வீடுகளைப் புதுப்பித்து அவ்விடத்தில் குடியிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (154)

---

## பலாலி, காங்கேசன் பகுதிகளில்

# 8 போராளிகள் உட்பட 16 பேர் பலி 50 பேர் காயம்! 25 வீடுகள் சேதம்!

(காங்கேசன்துறை)

பலாலி, காங்கேசன்துறை பகுதிகளில் 24 மணி நேரம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 8 பொதுமக்கள் பலியானார்கள். 8 போராளிகள் வீரமரணம் அடைந்தனர். 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். 25க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன,

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து சனிக்கிழமை மாலை வரை மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதலில் மயிலிட்டி நாவலடி ஒழுங்கையில் இடம்பெற்ற பொம்பர் தாக்குதலே மிகவும் பாரதூரமானதாக இருந்தது.

இத்தாக்குதலில் அவ்விடத்தைச் சேர்ந்த சிவதாசன் மேகலா (40 வயது), சிவதாசன் அன்புமலர் (16 வயது) சிவதாசனின் தாயார் கமலம் (60 வயது), சிவதாசனின் தம்பியாரின் பிள்ளைகள் உதயதாஸ் (4 வயது), பிரேமினி (16 வயது). அயல்வீட்டுக்காரர்களான வடிவேலவன் புஷ்பராணி (35 வயது), வடிவேலன் பிரபாகரன் (6 வயது) தியாகராஜா ஜெயக்குமார் (19 வயது) ஆகிய 8 பேருமே உயிரிழந்தனர்.

தம்பையா ஜீவானந்தினி (16 வயது) பலத்த காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் பொம்மர் விமானத்திலிருந்து 3 குண்டுகள் வீசப்பட்டதாகவும், அடுத்தடுத்து இருந்த 5 வீடுகள் பலத்த சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் இடம்பெற்ற தாக்குதலில் துறைமுக பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பலை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டு கப்பல் பெரிதும் சேதமுற்றது. இதனை முறியடிக்க 4 பீரங்கிப்படகுகள் விரைந்து வந்து கடற்கரையில் நின்றவாறு தாக்குதலை நடத்தின. போராளிகள் அவற்றை எதிர்த்து தாக்குதல் நடத்தவே அவை பின்வாங்கிச் சென்றன. ஒரு பீரங்கிப்படகுக்கும் சேதம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

காங்கேசன்துறை - கீரிமலை வீதி இந்திய இராணுவம் புறப்பட்ட பின்பு பொதுமக்களால் உபயோகிக்கப்பட்டு வந்தது. ஆனால் தாக்குதல் சம்பவங்களை அடுத்து இவ்வீதி போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. (86)

---

# விபத்துக்குள்ளான போராளி மீது சரமாரியாக 'ஹெலி' சுட்டது!

## சாதுரியமாக உயிர் தப்பினார்

[காங்கேசன்துறை]

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி நடுவீதியில் கிடந்த விடுதலைப் புலிகள் இயக்க போராளியை நோக்கி சரமாரியாகக் 'ஹெலி'யிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோதும் அவர் சாதுரியமாக உயிர்தப்பினார்.

தெல்லிப்பழை - கட்டுவன் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

மயிலிட்டியைச் சேர்ந்த [illegible] எனப்படும் இப்போராளி தெல்லிப்பழையிலிருந்து கட்டுவன் நோக்கி சென்ற சமயம், இடையில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி நடுவீதியில் வீழ்ந்துவிட்டார்.

முழங்காலில் காயமடைந்து எழும்பமுடியாத நிலையில் நடுவீதியில் ஆயுதத்துடன் காணப்பட்ட இப்போராளியை மேலே சென்றுகொண்டிருந்த ஹெலி கண்டு சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

தெய்வாதீனமாக அவர்மீது வேட்டுக்கள் விழவில்லை. ஆனால் அவர் இறந்து விட்டதாகக் கருதி ஹெலிகொப்டர் சென்று விடவே பொதுமக்கள் அவரைக் காப்பாற்றி சிகிச்சை அளித்தனர். (86)

---

## மேலதிக தபால்பெட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தின் உட்பக்கத்தில் பொதுமக்கள் தங்கள் கடிதங்களை தபாலில் சேர்ப்பதற்கு வசதியாக மேலதிக தபால் பெட்டிஒன்று வைக்கப்பட்டுள்ளது. (72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரபு உலகிற்கு இஸ்ரேல் பெரும் அச்சுறுத்தல்:

# அணு ஆயுத, விண்வெளி ஆராய்ச்சியில் உடனடியாக ஈடுபட லிபியா தீர்மானம்

### கேர்ணல் கடாபி அறிவிப்பு

(திரிபொலி)

**உலகில் ஏற்பட்டுவரும் அணுஆயுத அச்சுறுத்தல்களையும், இராணுவ ஆக்கிரமிப்புக்களையுமடுத்து லிபியாவும் அணுஆயுதத் தயாரிப்பிலும், விண்வெளி ஆராய்ச்சியிலும் ஈடுபடவுள்ளதாக அந்நாட்டு அதிபர் கேர்ணல் கடாபி அறிவித்துள்ளார்.**

லிபியப் பல்கலைக்கழகம் ஒன்றில் நேற்று முன்தினம் மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் சந்தித்துப் பேசுகையில் கேர்ணல் கடாபி தமது விருப்பத்தை வெளியிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த நடவடிக்கை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். அணுஆயுத உற்பத்திக்கும், விண்வெளி ஆராய்ச்சிக்கும் சம்பந்தப்பட்டவர்கள் இரவு, பகல் பாராது தமது முழு ஒத்துழைப்பையும் நாட்டுக்காக அர்ப்பணிக்கவேண்டும்.

அரபு உலகிற்கு இஸ்ரேல் தொடர்ந்தும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. அரபு நாடுகளை நோக்கி இஸ்ரேல் 200க்கும் மேற்பட்ட அணுஆயுதங்களைத் தயார்நிலையில்வைத்துள்ளது.

இதனை முறியடிக்க நாம் உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். இஸ்ரேலின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள லிபியா தயாராகவருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

---

# பாகிஸ்தானில் மீண்டும் இனக்கலவரம் 5000 பேர் கைது!

### ராணுவம் பலத்த தாக்குதல்

(கராச்சி)

பாகிஸ்தானில் சிந்து மாகாணத்தில் இடம்பெற்று வரும் இனக் கலவரங்களையடுத்து கடந்த மூன்று வாரத்தில் சுமார் 5000 பேர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சியில் நேற்று முன்தினம் மீண்டும் பெரும் இனக் கலவரம் வெடித்துள்ளது. கலவரம் வெடித்த பல பகுதிகளிலும் இராணுவம் பெரும் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளது.

இராணுவத்தின் கடும் தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். நிலைமைகளை கட்டுப்பாட்டில் கொண்டுவர உடனடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு முப்படைகளுக்கும் அரசு உத்தரவிட்டுள்ளது.

எனினும் நிலைமை மோசமடைந்து வருவதாகவும் கொலை, கொள்ளை, தீவைப்பு பெருமளவில் இடம்பெற்று வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

---

# லைபீரியாவில் சமாதனப் பேச்சுகள் முறிவு மீண்டும் யுத்தம் வெடிக்கலாம்

(மொன்ருவியோ)

லைபீரியாவில் அரசுக்கும் கெரில்லாக்களுக்கு மிடையில் நடைபெற்றுவந்த சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்துள்ளன. மீண்டும் ஒரு யுத்தம் எவ்வேளையிலும் வெடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

லைபீரியாவில் அரசுக்கு எதிராக இடதுசாரிக் கெரில்லாக்களான 'றினுமல்' விடுதலைப் படையினர் கடந்த சில வருடங்களாக உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அண்மைக்காலங்களில் கெரில்லாக்களின்கை பெருமளவு பலமடைந்துவந்துள்ளது.

பல இராணுவ நிலைகளையும் முக்கிய அரசு கேந்திர நிலையங்களையும் கைப்பற்றியுள்ள கெரில்லாக்கள் விமான நிலையம் ஒன்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். கடந்த இரு வாரத்திற்கு முன் அரசு கெரில்லாக்களுடன் யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்தியது.

சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றபோதும் எதுவித முன்னேற்றமுமில்லாமல் பேச்சுக்கள் முறிவடைந்துள்ளன. இதையடுத்து இரு பகுதியும் மீண்டுமொரு யுத்தத்திற்குத் தயாராகிவருகின்றது. (சி)

---

## "பதவிகளைக் கொடுத்து

# பழைய தலைவர்களை ஏமாற்றியதுபோல் எம்மையும் ஏமாற்றிவிட முடியாது" டொமினிக்

(யாழ்ப்பாணம்)

"அரசும் இராணுவமும் வேவ்வேறு விதமான செயல்களில் நடுபட்டு எம்மை முறியடித்துத் தமிழினத்தைக் கருவறுக்கப் பார்க்கின்றன. இதனை நாம் எப்படி அனுமதிப்பது? ஜே. வி. பி. என்ற சிங்கள எதிரணியை இல்லாது ஒழித்ததுபோல எம்மையும் எம்து தலைவரையும், தமிழர்களையும் ஒழித்துவிடலாம் என்று கருதுகிறார்கள். ஆனால் இது நாம் உயிரோடுள்ளவரை நிலைக்கப்போவதில்லை. கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக உண்மையான நேசமனப்பான்மையுடன் அரசுடன் பேசினோம். பயன் ஏதும்இல்லை. பதவிக் கதிரைகளைக் கொடுத்து தம்மைப் பாதுகாத்த பழைய தலைவர்களைப் போல எம்மை இந்த அரசினால் ஏமாற்றமுடியாது"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போது கூறினார்.

இவ்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு வித்தியாலய அதிபர் வீ. த. திருநாவுக்கரசு தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினராக மருதனமடம் உதவிக்கல்விப் பணிப்பாளர் பணிமனையைச் சேர்ந்த கல்வி அதிகாரி திருமதி அ. துரைசிங்கம் கலந்துகொண்டார்.

திரு. ஸ்ரான்லி டொமினிக் மேலும் கூறியதாவது: "நாம் எவ்வறு தமிழ்த் தேசியப் பற்றுடன் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றினோமோ அவ்வாறே இலங்கை இராணுவத்தையும் வெளியேற்றுவோம். நம்பிக்கைத் துரோகம் செய்தவர்களை நாம் ஒருபோதும் மன்னிக்கமாட்டோம். ஆனால் எமக்கு நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டே நம்மையும் நம்மினத்தவரையும் ஒழிக்கவருபவர்களை நாம் ஒரு தூசாகவே நினைத்துக் களத்தில் இறங்குவோம்" பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி அதிகாரி திருமதி அ. துரைசிங்கம் பேசுகையில், "ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. எனினும் மிகவும் வசதியற்ற சூழ்நிலையில், விளையாட்டு மைதானம் அற்றநிலையில் மிகத்திறம்பட, உள்ளவொரு மிகக்குறுகிய மைதானத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இவ்வூர்ப் பொதமக்களும் நாமும் சேர்ந்து அடுத்த ஆண்டிலேயே இப்பாடசாலைக்குப் பெரியதொரு விளையாட்டு மைதானத்தைப் பெற்றுக் கொடுப்போம். அதிபரும், ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் அற்புதமாகச் செயற்பட்டு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியைச் சிறப்பாக நடத்தி உள்ளார்கள். அவர்களை நான் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறேன்." என்றார்.

வித்தியாலய அதிபர் பேசுகையில்: "இன்று நாம் மாறுகின்ற காலகட்டத்தில் வாழ்கின்றோம். வெறும் விளம்பரங்களை வைத்துக்கொண்டு சுகபோகம் அனுபவித்த தலைவர்கள் காலம் போக, இன்று சொல்லும் செயலும் ஒன்றுகவுள்ள இளைஞர்களின் கரங்களில் எமது எதிர்காலத்தை ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் எம்மை வாழவைப்பார்கள்" என்றார்.

கல்வி அதிகாரி திருமதி அ. துரைசிங்கம் போட்டியில் வெற்றியீட்டிய இல்லங்களுக்கும் மாணவர்களுக்கும் பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கினார். 284 புள்ளிகள் பெற்று சோழன் இல்லம் முதலாமிடத்தையும், 200 புள்ளிகள் பெற்று சேரன் இல்லம் இரண்டாமிடத்தையும், 134 புள்ளிகள் பெற்று பாண்டியன் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன (154)

---

## மீனவர்கள்

# கடலுக்கு செல்லவில்லை

([illegible])

[illegible] ரோந்துப்படகுகள் காரைநகர் தொடக்கம் சுழிபுரம், மாதகல், கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய கடல் பகுதிகளில் அடிக்கடி ரோந்து சுற்றி வருகின்றன. இதனால் கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்து கடலில் மீன்பிடிப்பதற்கு செல்லாதிருக்கின்றனர். (72)

---

## சிறுவர்களுக்கான விளையாட்டுப்

# போர்க் கருவிகள் அமெரிக்க நாட்டில் அழிப்பு

(லொஸ் ஏஞ்சல்)

அமெரிக்காவில் சிறுவர்களுக்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான பிளாஸ்டிக் விளையாட்டுப் போர்க் கருவிகள் உருளை இயந்திரத்தினால் அழிக்கப்பட்டன

அமெரிக்காவிலுள்ள லொஸ் ஏஞ்சல் மாநிலத்திலேயே இந்தப் போர்க்கருவி விளையாட்டுப் பொருட்கள் அளிக்கப்பட்டன.

அழிக்கப்பட்ட பிளாஸ்டிக் துண்டுகளைப் பொதியாக்கி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்ற அமெரிக்க விளையாட்டுக் கருவிகள் உற்பத்தியாளர்களின் வருடாந்த கூட்டத்தில் பங்குபற்றியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

விளையாட்டுப் போர்க்கருவிகள் உற்பத்தியை பொதுமக்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டும் ஒரு அடையாள நிகழ்வாக இந்த அழிப்பு நடவடிக்கை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## "அமரர் கந்தையா

# கல்விமான்களில் தலைசிறந்த நிர்வாகி"

(தென்மராட்சி)

"தென்மராட்சிப் பகுதியில் முன்னர் வாழ்ந்த கல்விமான்களில் தலைசிறந்த நிர்வாகிகளுள் ஒருவரான அமரர் வி. வி. கந்தையாவின் பரோபகார சிந்தையும் பொதுமக்களுடன் அன்பு கலந்து அளவளாவி உறவாடும் பண்பும் என்றும் எவராலும் மறக்க முடியாது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கனிஷ்டபிரிவு அதிபரான அமரர் வி. வி. கந்தையாவின் திருவுருவப் படத்தின் திரைநீக்க விழாவில் உரையாற்றும்போது கனிஷ்டபிரிவின் முன்னாள் அதிபரும் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்க முன்னாள் தலைவருமான திரு எஸ். வி. வைத்திலிங்கம் இவ்வாறு கூறினார்.

சாவகச்சேரி டிறிபேக் கொத்தணிக் கல்லூரி அதிபர் க. பாலச்சந்திரன் தலைமையில் திருவுருவப்படம் திருமதி ரி. போலினால் திரைநீக்கஞ் செய்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் ஜனுப் ஹனுப் ஹரிம் பொது நூலகத்தலை திரு. ஏ. குலசேகரம் உட்பட பலர் உரைநிகழ்த்தினர்கள். பழைய மாணவர் பெற்றோர் உட்பட அநேகர் கலந்துகொண்டனர். (81)

---

## ஆலய உற்சவத்தினால்

# மக்களின் வாழ்வு புனிதமடையும்

(தென்மராட்சி)

"சைவமக்களின் வாழ்க்கை இந்து கலாச்ச்ாரத்துடன்மிக நெருங்கிய தொடர்புடையதாகும். ஆலயங்களில் வருடந்தோறும் குறிப்பிட்ட காலங்களில் திருவிழா நடைபெறுவது சகஜம். ஆலய மகோற்சவம் சிறப்பாகநடைபெறும் போது அக்கிராம மக்களின் வாழ்வும் புனிதமடையும்"

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் சரசாலை இந்து இளைஞர் மன்றச்சார்பில் நடைபெற்ற சமயப்பிரசார வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக பீடத்தலைவர் திரு. ப. கோபாலகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

ஆசிரியர் திரு. ந. புவனிசிறீ தலைமையில் இப்பிரசாரம் நடைபெற்றது.

திரு. கோபாலகிருஷ்ணன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது; முன்னர் அந்நியர் ஆட்சிக் காலத்தில் பல ஆலயங்கள் அழிந்த போதும் தற்போது அவை புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்வது மக்கள் இறைவன் மீது கொண்ட பக்திவிசுவாசத்தைப் பிரதிபலிக்க வைக்கின்றது.

திரு. ச. நமசிவாயம் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். (81)

---

# நவாலியில் புதிய தும்புத்தொழிற்சாலை

(மானிப்பாய்)

நவாலியில் புதிய தும்புத் தொழிற்சாலையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தும்புத் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்குடனும் அப்பகுதியில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளிக்குமுகமாகவும் நிறுவப்பட்டுள்ளன. மேற்படி தொழிற்சாலையின் திறப்புவிழா வைபவத்திற்கு நவாலி முருகானந்தா சனசமூக நிலையத் தலைவர் திரு. வே. சிற்றப்பலம் தலைமை தாங்க நவாலி மாதர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவி திருமதி க. இராஜேஸ்வரி மங்கள விளக்கேற்ற இளைப்பாறிய ஆசிரியர் திரு. சி. ஜே. இளையதம்பி திறந்து வைத்தார்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் கு. சிவசம்பு, கிராமசேவை அலுவலர் திரு. க. சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்கள். (76)

---

## சீனாவில்

# 100 பேர் பலி

### 1000 வீடுகள் சேதம்

[பீக்கிங்]

சீனாவில் முப்பது வருடத்திற்குப் பின்னர் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் நூறுபேர் பலியானதுடன் ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன.

சீனாவின் தென்பகுதியில் இருநாட்கள் தொடர்ச்சியாகப் பெய்த மழையை அடுத்தே இந்த வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நெருக்கடி நிலை—

# இந்தியபிரதமரை கருணாநிதி இன்று சந்தித்து ஆலோசனை

(சென்னை)

இலங்கையின் வடக்கு-கிழக்கில் எழுந்துள்ள யுத்த நிலை தொடர்பாகத் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி, இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங்குடன் இன்று அல்லது நாளை பேச்சுக்கள் நடத்துவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், இதன் ஒரு கட்டமாகவே பிரதமர் திரு சிங் முதல்வர் கருணாநிதியை நேரடிப் பேச்சுக்கள் நடத்தப் புதுடில்லிக்கு அழைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர இந்தியா நடவடிக்கை எடுக்கலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

யாழ். நகரில் பதற்றநிலை;

## பாதுகாப்பான பகுதிகளுக்கு மக்கள் வர்த்தகப் பொருள்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதியில் இனம் புரியாத பதற்றம் நேற்று நிலவியது

வர்த்தகர்கள் சிலர் தமது வர்த்தக நிறுவனத்திலிருந்து முக்கிய பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது

பொதுமக்கள், உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை காட்டினர். நகரை அண்மித்த பகுதிகளில் பலர் இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து கொண்டிருந்தனர். சிலர் பதுங்குழிகள் அமைப்பதிலும் ஈடுபட்டார்கள்.

### பெற்றோல் 75 ரூபா

எரிபொருள் சில தனியார் வர்த்தகர்களிடம் கைவசமிருந்த போதும் அவற்றின் விலை 'குதிரை' விலையாக காணப்பட்டது. ஒரு போத்தல் பெற்றோல் எழுபத்தைந்து ரூபா வரையிலும விற்பனை செய்யப் பட்டது!

மண்ணெண்ணை மற்றும் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக பலர் வெற்றுக் கலங்களுடன் நகரில் அலைந்து திரிந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது'

போக்கு வரத்துச் சேவையும் நேற்று வழமையைவிட குறைவாக இருந்தது. மாலை 4-30 மணியளவில் நகர்ப் பகுதியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் ஒருதடவைகேட்டது. இதனைத் தொடர்ந்து பஸ் நிலையம் மற்றும் நகரப் பகுதியில் நடமாடிய மக்கள் மத்தியில் பரபரப்பு காணப்பட்டது.

## யாழ். செயலகத்தில் பொதுமக்கள் வரவு குறைவு

(மானிப்பாய்)

யாழ். செயலகத்திற்கு நேற்றுப் பொதுமக்களின் வருகை மிகக் குறைவாகவே காணப்பட்டது.

தினமும் காலையிலிருந்து நண்பகல் வரை நீண்ட 'கியூ' வில் காணப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்களைக் கையேற்கும் கருமபீடத்தில் 'கியூ' காணப்படவில்லை.

கடவுச் சீட்டு அலுவலகத்தில் ஒரு விண்ணப்பம் மட்டுமே கையளிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து தபால்கள் வராததினால் பொதுவாக அலுவல்கள் மந்த நிலையில் காணப்பட்டன. (71)

## முகாம்களை சுற்றிவளைத்து தொடர்ந்து தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இடம் பெற்றுவரும் யுத்தத்தில் சில இராணுவ முகாம்களில் அரச படையினர் உணவும், தண்ணீருமின்றி அவதிப்படுவதாக பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்துள்ளது.

100க்கும் குறைவான இலங்கைப் படையினர் உள்ள சில முகாம்களை விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்து, கடும் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகவும், உணவுப் பொட்டலங்களை இம்முகாம்களுக்கு 'ஹெலி' கள் வீசமுடியாதவாறு தாக்குதல் நடைபெறுவதாகவும் மேற்படி செய்தி தெரிவித்தது.

கிழக்கில் பல பகுதிகளிலும் தொடர்ந்தும் யுத்தம் நடைபெறுவதாகவும் பி. பி. ஸி. கூறியது. (சி)

## கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கான கருத்தரங்கு நாளை புதன்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் கோண்டாவில் மாதிரிச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கிழக்கில் தொடர்ந்து தாக்குதல்

# 80 தமிழ்பேசும் மக்கள் பலி

## தம்பலகாமத்தில் 300 குடும்பங்கள் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அரசுப் படையினர் தொடர்ந்து நடத்திய தாக்குதலில் 80 தமிழ்பேசும் மக்கள் கொல்லப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சீனன்குடா, கப்பல்துறை, வெள்ளைமணல் ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை கடற்படையினர் பீரங்கிப் படகுகளால் தாக்கியுள்ளனர். அத்துடன் பொம்மர் தாக்குதல்களும் மேற்படி இடங்களில் நடைபெற்றன. இத்தாக்குதலில் 80 தமிழர் பலியானார்கள். வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

கந்தளாய்ப் பகுதியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அகப்பட்ட தமிழ்மக்களை அரசுப் படைகளும், சிங்களக் காடையர்களும் துப்பாக்கியால் சுட்டும், வெட்டியும் கொன்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

300க்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் அகதிகளாகித் தம்பலகாமம் கிராமத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர். (153)

வவுனியாவில் பலத்த மோதல்—

# 25 இராணுவத்தினர் பலி!

## புலி பொறுப்பாளர் டேவிட் காயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நேற்று மூன்றுவது நாளாக இடம்பெற்று வரும் அரசதரப்பினரின் யுத்த நிறுத்த மீறலை எதிர்த்து புலிகள் தாக்குதல் நடத்திய போது 25 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இம்மோதலில் புலிகளின் வவுனியா ஆயுதப் பொறுப்பாளர் டேவிட் படுகாயமடைந்தார்.

மேலும் இத்தாக்குதல் சம்பவத்தில் இருதரப்பிலும் சரமாரியான துப்பாக்கி, ஷெல் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைகளுக்கு உதவியாக இரண்டு ஹெலிகொப்டர்களும் தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 6-30 மணியளவில் தமது கடைகளைப் பார்க்கச் சென்றவர்மீது பதுங்கியிருந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் கடைகளைப் பார்க்கச் சென்ற அனைவருமே படுகாயமடைந்து நிலத்தில் வீழ்ந்து விட்டதாகவும், ஒருவர் மட்டும் காயங்களுடன் தப்பிஓடிவந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தப்பி வந்தவரான மன்னாரைச் சேர்ந்த ஸ்ரான்லி பெர்னாண்டோ (வயது 26) என்பவர் விடுதலைப் புலிகளின் உதவியால் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [56]

### யுத்தத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளதுடன், சம்பந்தப்பட்டவர்கள் பேச்சுக்களை நடாத்திப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்றும் கோரியுள்ளன

இதேவேளை, தற்போதைய யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவராவிடில் இலங்கைக்கான உதவிகளை நிறுத்தப்போவதாக பிரிட்டன் எச்சரித்துள்ளதும் குறிப்பிடத் தக்கது. (சி)

### தற்போதைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனாவசிய உயிரிழப்பும், ரத்தம் சித்தப்படுவதும் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

எல்லாப் பிரச்சனைகளுக்கும் யுத்தம்தான் தீர்வு என்பது தவறான கோட்பாடாகும். பேச்சுவார்த்தை மூலமும் ஜனநாயக வழிகள் மூலமும் அரசியல் தீர்வு காணமுடியாத நிலை ஏற்படும்போதும் மாத்திரமே ஆயுதம் ஏந்துவது அவசியமாகும்''.

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், மலையக மக்களின் பிரச்சனைகளும் முழுமையாக இன்னும் தீர்வு காணப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

### யுத்தநிறுத்தத்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்ட அறிக்கையின் மூலம் அழைப்பு விடுத்துள்ளது.

''யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி, ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்டு வரும் இனப் படுகொலையை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது'' என்று தெரிவிக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''வடக்கு-கிழக்குப் பகுதி மக்கள் மீது கொண்ட அக்கறையினாலேயே சமாதானத்தை விரும்பி யுத்த நிறுத்தம் செய்வதாகப் பறைசாற்றிக் கொண்ட ஸ்ரீலங்கா அரசு, செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்பாட்டைத் துளியளவு கூட மதியாது, தொடர்ந்தும் தமிழ்ப் பகுதிகளில் பெரும் தாக்குதலை நடத்திவருகிறது.

யுத்த நிறுத்தத்துக்கு மதிப்பளித்து விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நிகழ்த்தாததைப் பெரும் வாய்ப்பாகப் பயன்படுத்தி, ஸ்ரீலங்காப் படையினர் தமிழ்பேசும் மக்கள் மீது பெரும் தாக்குதலை நிகழ்த்தி வருகின்றனர்.

இது ஸ்ரீலங்கா அரசு தமிழ்பேசும் மக்கள்மீது தொடுத்திருக்கும் போராகும். ஸ்ரீலங்காப் படையினரை நேரடியாகச் சந்திகத் தயாராகி அவர்களின் முகாம்களின் முன்றலில் நிற்கும் விடுதலைப்புலிகளை விட்டுவிட்டு ஸ்ரீலங்கா படையினர் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் பெரும் தாக்குதல்களை நடத்தி வருவதிலிருந்து ஸ்ரீலங்கா அரசின் எண்ணத்தை தமிழ்பேசும் மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினரது தாக்குதலையும் இந்தியப்படையினரது தாக்குதலையும் எதிர்கொண்டு இதுவரை ஏறத்தாழ 1500 விடுதலைப் புலி வீரர்கள் களப்பலியாகியுள்ளனர். அதேகாலத்தில் போராட்டத்தில் எதுவித தொடர்புமற்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேரடியாகப் போராடினாலென்ன, போராட்டத்துக்கு வெளியே இருந்து ஒத்துழைத்தாலென்ன, போராட்டத்திலிருந்து முற்றாக விலகி ஒதுங்கி நின்றாலென்ன தமிழ்பேசும் மக்கள் ஸ்ரீலங்கா படையினரின் இனவெறித் தாக்குதல்களுக்குள்ளாவதிலிருந்து தவிர்க்க முடியாது என்பதையே கடந்தகாலச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்பேசும் மக்கள் மீது தாக்குதலைத் தொடுத்த சிங்கள, இந்தியப்படைகளை எதிர்கொண்ட எமது வீரர்கள் ஏறத்தாழ 5000 எதிர்ப்படையினரை அழித்துள்ளனர். இதில் எமது வீரர்கள் 1500 பேர்வரை வீரமரணமடைந்தனர். எதிர்ப்படையினரில் மூவரை வீழ்த்துவதற்கு ஒருவர் என எமது வீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்த போதிலும் அநியாயமாக எவ்வித பயனுமற்ற முறையில் கொல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடியிருந்தால் எதிர்ப்புச் சக்திகளைப் பெருமளவில் ஒடுக்கியிருக்கலாம். அநியாயமாக கொல்லப்பட்ட இளைஞர்களின் தொகையும் குறைந்திருக்கலாம்.

எனவே இனிமேலாயினும் ஸ்ரீலங்காப்படையினரால் ஏற்பட்டுவரும் பேரழிவைத் தடுப்பதற்கு தமிழீழ இளைஞர்களுக்கு உள்ள ஒரேவழி எதிரிகளை எதிர்த்து விடுதலைப் போரை நடத்திவரும் எம்முடன் ஒன்றிணைந்து போராடுவதே.

தமிழ்பேசும் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும்போரை எதிர்கொள்வதற்கு தமிழீழ மக்கள் அனைவரும் எம்மோடு இணைந்து விடுதலைப் போராட்டத்திற்கு தங்களான அனைத்துப் பங்களிப்புக்களையும் செய்ய முன்வரவேண்டும்.''

## மரண அறிவித்தல்

### திருமதி யோகாம்பா இரத்தினசிங்கம்

புலோலி கிழக்கைச் சேர்ந்த யோகம்பா இரத்தினசிங்கம் (18-6-90) அன்று காலமானார். அன்னார் திருமதி சரஸ்வதி, திரு. சிவபாதசுந்தரம் (அப்புக்காத்து), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், திருமதி சிவபாக்கியம் [கனடா], காலஞ்சென்ற திருமதி கமலாம்பிகை, திருமதி சந்திரகாந்தா, திரு. கதிரவேலு [கனடா], கலாநிதி நடராசா [ஐக்கிய அமெரிக்கா] ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராமலிங்கம், இளையதம்பி, திருமதி அன்னலக்ஷ்மி, திருமதி பரமேஸ்வரி, காலஞ்சென்ற C. T. நமசிவாயம், காலஞ்சென்ற சின்னையா இராசையா, திரு. க. கனகரத்தினம், கௌரி [கனடா], லோனா [ஐக்கிய அமெரிக்கா] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். ஈமக்கிரிகைகள் புலோலி மேற்கு இந்துமயானத்தில் 19-6-90 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும் என்பதை உற்றார், உறவினருக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. சிவபாதசுந்தரம்,

''மனோகரி''
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

[சி- 3996]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org